**வனாதவில்லு பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 11 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 10 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வனாதவில்லு பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி** | | | |
| **(i)** | விதி இலக்கம் 5(3) | வருமானம் சேகரித்தல் தொடர்பில் போதியளவான உள்ளக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருமானம் சேகரித்தல் தொடர்பில் போதியளவான உள்ளக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | வருமானம் சேகரித்தல் தொடர்பில் போதியளவான உள்ளக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன் எனபதுடன், அதனை மேற்கொள்வதற்காக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | எழுத்துமூல அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| **(ii)** | விதி இலக்கம் 205 | 2018 ஆம் ஆண்டிற்குரிய நியமிக்கப்பட்ட மெய்மையாய்வுச் சபையின் அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மெய்மையாய்வுச் சபையின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பொதுச் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் மெய்மையாய்வு சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |
| **(iii)** | விதி இலக்கம் 218 | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து காணி மற்றும் கட்டடிங்கள் தொடர்பிலும் ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு தடவை விசாரணையொன்று மதிப்பாய்வு சபையினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அனைத்து ஆதனங்களும் வருடாந்தம் மதிப்பிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஒவ்வொரு வருடமும் காணி மற்றும் கட்டிடம் தொடர்பான விசாரணை குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணையொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** ------------------------------- | | | |
| | இலக்கம் 1645 | சபையினால் பயன்படுத்தப்பட்ட அனைத்து வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் சமர்ப்பிக்கப்டப்டிருக்கவில்லை. | ஓட்டக் குறிப்புகள் உரிய திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குரிய அனைத்து வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் சாரதிகளை கொண்டு நாளதுவரையாக்கவும், அதற்கடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் அந்த ஓட்டக் குறிப்புகள் விடயப்பொறுப்பு உத்தியோகத்தரால் கணக்காய்விற்கு உட்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

**(இ) திறைசேரி சுற்றறிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐ.ஏ.ஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான கணனி உபபாகங்கள் தொடர்பில் நிலையான வைப்புக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான வைப்புக்கள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | சபைக்கு சொந்தமான கணனி உபபாகங்கள் தொடர்பில் நிலையான வைப்புக்கள் பதிவேடொன்று எதிர்காலத்தில் தனித்தனியாக பேணிச் செல்வதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,622,281 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 374,808 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| மதிப்பீடு மற்றும் வரியும் | 895 | 990 | 892 | 1,040 | 805 | 814 | 872 | 942 |
| வாடகை | 35,108 | 2,083 | 2,083 | 1,484 | 32,927 | 2,153 | 2,026 | 1,484 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 571 | 354 | 354 | - | 325 | 199 | 199 | - |
| ஏனைய வருமானம் | 3,170 | 60,239 | 64,865 | 17,708 | 7,280 | 52,386 | 52,824 | 14,890 |
| மொத்தம் | 39,744 | 63,666 | 68,194 | 20,232 | 41,337 | 55,552 | 55,921 | 17,316 |

❖ சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் மீளாய்வாண்டிற்குரியதாக பட்டியலிடப்பட்ட வருமானத்தில் மேற்கொண்ட சேகரிப்புகள் மற்றும் கடந்த வருடங்களில் நிலுவை வருமானங்களில் மேற்கொள்ளப்பட்ட சேகரிப்புகளும் உள்ளடங்கியுள்ளது.

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வாடகை வருமானம் மற்றும் அனுமத்திப்பத்திர கட்டண வருமாணம் சேகரிக்கும் போது பட்டியலிடலாக காண்பிக்கப்பட்டமையால் நிலுவை வருமானம் காணப்படவில்லை. மீளாய்வாண்டினுள் சேகரிக்கப்பட்ட ரூபா 1,932,000 தொகையான மொத்த வீதவரியில் ரூபா 892,000 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. | அறவிடப்பட வேண்டிய வருமானங்களை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 02 குத்தகை ஆதனங்களுக்காக வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 19 ஆண்டுகளுக்கு முன்னர் பெற்ப்பட்டிருந்த மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் தொடர்டந்தும் வீதவரி அறவிடப்படுகின்றது. | வீதவரி மதிப்பீட்டினை பெற்றுக்கொள்ள துர்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

### 2.2.4 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 616,784 மீதியில் ஆண்டிற்காக பட்டியலிடப்பட்ட தொகை ரூபா 74,000 மாத்திரம் ஆகும். | சரியான நிலுவை மீதிகள் பரிசோதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டிய தொகைகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏக்கர் வரி அறவிடல் தொடர்பில் இது வரையிலும், உரித்தினை இனங்காண முடியாமையால் பரிசோதித்து நிலுவைப் பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 2.2.5 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் வாடகை அடிப்படையில் வழங்கப்படும் கடைகளில் அறவிடப்பட வேண்ய வாடகை ரூபா 952,511 தொகையை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானத்தை சரியான முறையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த கடை உரிமையாளர்களின் உத்தினை சுவீகரிப்பதற்கும், மே மாதம் முதல் குறித்த கடைகளின் பட்டியலிடலை நிறுத்தி நிலுவையை அறவிடுதல் பொதுச் சபையின் முன்மொழிவாகும். அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரியதாக பெற்றுக் கொள்ள வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 1,949,518 உம் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 7,816,388 தொகையையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பணத்தில் 2019.06.10 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,230,532 தொகை மற்றும் முத்திரைக் கட்டணங்களில் ரூபா 4,784,186 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய தொகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக |

தாழ்மையுடன்
தெரிவிக்கின்றேன்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரசட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 1988 ஆமத் ஆண்டின் போது 42 விடய்களுக்காக மாத்திரம் உபவிதிகள் வர்த்தமானிப்படுத்தப்பட்டிருந்தன, அத்துடன், 05 உபவிதிகள் விதிக்கப்பட்டிருந்தன. அதனுள் சபைக்கு வருமானம் ஈட்டக்கூடிய உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குரிய உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | குறித்த உப விதிகளுக்கு உரியதாக சபையின் அதிகாரப்பிரதேசத்தில் அறவிட இயலக்கூடிய அனைத்து வருமானங்களும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) செயல்நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதென அறிவிக்கின்றேன். |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் ரூபா 3,807,268 பெறுமதியுடையதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த கூட்டெரு நிலையம் மீளாய்வாண்டினுள் | உயர் தரத்திலான கூட்டெரு உற்பத்திக்காக முறையான | நிலையத்தின் கூரைகள் தயாரிக்கப்பட்டு தரை உடைந்துள்ளதுடன், அந்த இடங்களில் மண் |

| | | |
|---|---|---|
| ஆக்கபூர்வமானதாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | வெளிப்படும். அதிக மண் கலந்த அந்த உரத்தினை விற்பனை செய்ய பொருத்தமற்றதாக இருந்தது. எதிர்காலத்தில் ஆணையாளரின் அங்கீகாரத்தினை பெற்று நாளாந்த சம்பள அடிப்படையில் ஊழியர்களை இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. |

**(ஈ) நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பில் 2019 ஆம் ஆண்டிலேயே கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பதால், 2019 ஆம் ஆண்டு முதல் அந்த நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றேன். |
| (ii) | பிரதேச சபையின் அதிகாரப்பிரதேசம் அழகான கலப்பொன்றினையும், 02 ஆறுகளையும் கொண்டிருந்தமையால், இயற்கை சூழலை பாதுகாப்பது தமது செயற்பணியின் ஒரு பகுதியாகிய போதிலும், கலப்பு கரையினை பாதுகாத்தல், அபிவிருத்தி செய்தல மற்றும் அதில் உள்ள கடல்வாழ் உயிரினங்களின் அபிவிருத்தியின் மூலம் பிரதேசத்தின் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சபையின் நோக்கம் தொடர்பில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 பாதீட்டில் கலப்பு உள்ளடங்களான மீனவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கி நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 3,728,438 பெறுமதியான 03 கட்டிடங்களின் மற்றும் உபகரணங்களின் செயற்படு நிலையில் இல்லாதிருந்தமையால் விளைவற்று காணப்பட்டது. | வளங்களின் உச்ச பயன்பாட்டினை பெற்றுக்கொள்ள முறையான வேலைத்திட்டமொன்று பின்பற்றப்பட வேண்டும். | மக்களின் வருகையின்மை காரணத்தால் தற்போது இந்த 02 வாச்சந்தைகள் நடைமுறைப்படுத்தப்படாமையால், எதிர்காலத்தில் சந்தைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |
| (ஆ) | நிலுவை வருமானம் தொடர்பில் காலப் பகுப்பாய்வுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் தொடர்பில் காலப் பகுப்பாய்வுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானங்கள் தொடர்பில் காலப் பகுப்பாய்வுகள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |
| (இ) | எழுவன்குளம் நீர் பம்பும் நிலையத்திற்கு மின்சாரத்தினை பெற்றுக்கொள்ள மீள்நிரப்பு அடிப்படையில் சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 58,775 தொகையான பணம் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையினால் செலவிடப்பட்ட ரூபா 58,775 தொகை புரநெகும செயற்திட்டத்தினூடாக சபைக்கு மீள பெற்றுக்கொள்வதற்காக குறித்த நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |
| (ஈ) | மீளாய்வாண்டினுள் வாகனங்களை வாடகைக்கு வழங்கியமையின் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூபா 168,400 தொகை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | வருமானம் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். | வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (உ) | சபையினால் நிர்மாணிக்கப்பட்ட 57 கடைகளில் நிலத்தின் உரித்து பிரதேச செயலாளருக்கு சட்டரீதியாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறித்த காணிகளின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அளவீட்டு பணிகளை மேற்கொள்வதில் தாமதங்களின் அடிப்படையில் சுவீகரிப்புகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 13 ஆக இருந்ததுடன், 03 பேரின் வெற்றிடம் நிலவியது. அங்கீகரிக்கப்படாத பதவியொன்றான ஆயர்வேத மருத்துவர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் இணைத்துக்கொள்ளபபட்டிருந்தார். | பதவியணியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை பதவிகளை அங்கீகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இங்கு அந்த அங்கீகரிக்கப்டப்ட 02 பதவிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியாவதுடன், 2015 ஆம் ஆண்டின் போது இணைத்துக்கொள்ளப்பட்ட 08 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வடமேல் அரச சேவைகள் ஆணைக்குழுவினால் எமது நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர். அவ்வாறே, எமது நிறுவனத்தின் தனியாதொரு பதவிப் பெயரொன்றின் கீழ் 07 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றுள் 04 பேருக்கு தற்போது வெற்றிடங்கள் காணப்படுகின்றன. |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் வாடகை அடிப்படையில் சேவை வழங்கப்படும் வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் வருமானம் சேகரிப்பதற்கு போதியளவான மற்றும் உரிய காலத்தில் பரிசோதிக்கும் நடைமுறையொன்று இல்லாதிருந்ததுடன், வழங்கும் சேவைகளுக்குரிய வருமானம் சபைக்கு கிடைப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறித்த பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாடகை அடிப்படையில் சேவை வழங்கப்படும் வாகனங்கள் வழங்கும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை சரியான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய வருமான பதிவேடொன்று ம் பேணப்படுகின்றமையால குறித்த சாரதிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறிவிக்கின்றேன். |

**3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பயன்படுத்தப்படாத தொலைபேசியொன்றுக்காக 03 வருட காலமாக நிலையான கட்டணங்களாக ரூபா 54,092 செலுத்தப்பட்டிருந்தது. | பயன்படுத்தப்படாத தொலைபேசிகளுக்காக கொடுப்பனவுகள் மெற்கொள்ளப்படக்கூடாது. | தற்போது துண்டிக்கப்பட்டுள்ளது. |

**4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் 28 செலவின விடயங்களுக்கு ரூபா 4,578,363 தொகையான மொத்த நிதியேற்பாடும் எஞ்சியிருந்ததுடன், 55 செலவின் விடயங்களின் 20 சதவீதத்திற்கு மேற்பட்ட நிதியோற்பாட்டிலான சேமிப்புகள் ரூபா 13,915,269 ஆகும். | நடைமுறைச் சாத்தியமான பாதீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது உத்தேச மீண்டெழும் மற்றும் மூலதன வருமானங்களை சேகரிப்பதற்கு தவறியமையால் சில செலவின விடயங்களின் கீழான செலவிம் மேற்கொள்ள முடியாதிருந்தது. |

**4.2 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளக கணக்காய்வு மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வினை மேலும் பலப்படுத்த வேண்டும். | சபையின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக ஒவ்வொரு மாதமும் உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. |